2005 செப்டம்பர் 22]

தினமும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலே மிகவும் ஆர்வம் கொண்டு வழங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு, அரசு முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

19—

மின்சார சுடுகாடு

***37517—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் மின்சார சுடுகாடு அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சியில் மின்சார சுடுகாடு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் நெல்லை மாநகராட்சியினுடைய ஜனத்தொகை கிட்டத்தட்ட 4–1/4 இலட்சம் இருக்கின்றது. அங்கே சுடுகாடு என்ற பெயரால், தாமிரபரணி ஆற்றங்கரை ஓரமாக பல சுடுகாடுகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே எரிக்கப்படுகின்ற காரணத்தால் சுற்றுப்புறச் சூழ்நிலை

பாதிக்கப்படுகின்றது. ஏற்கெனவே மாநகராட்சியிலிருந்து இதற்கு 78 இலட்சம் ரூபாய் மதிப்பீடு போடப்பட்டு, உலக வங்கியினுடைய கடனைப் பெறுவதற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இதை இந்த அரசு, சுற்றுப்புறச்சூழலை அனுசரித்தும், மக்களுடைய சிரமங்களைத் தவிர்க்கின்ற வகையிலேயும், பல்வேறு பிரச்சினைகள் இந்தப் பகுதியிலே இருப்பதால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சுற்றியுள்ள கிராமங்களை எல்லாம் சேர்த்துப் பார்த்தால்கூட, மாதம் ஒன்றுக்கு இறப்பு சதவிகிதம் சற்றேறத்தாழ 400, 500 பேர் என்று மாநகராட்சியிலே மட்டும் இருக்கின்றது. சுற்றுப்புறக் கிராமங்கள் என்று வரும்போது அதிகமான எண்ணிக்கை இருக்கின்றது. இந்தச் சுற்றுப்புறச்சூழலை மனதில் வைத்து இந்த மாநகராட்சியினுடைய மிக அவசியமான இந்த மின்சார சுடுகாடு என்பது மிகத் தேவை என்பதையும் அறிந்து, இதை இந்த அரசு அமைக்க முன்வருமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 4 இலட்சத்து 11 ஆயிரத்து 831 ஆகும். இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் மக்கள்தொகைக்கு ஏற்ப போதுமானதாக உள்ளன. ஆகவே, இங்கே மாநகராட்சிப் பகுதியிலே 12 இடுகாடுகளும், 5 சுடுகாடுகளும், ஒரு கல்லறையும், 3 மயானங்களும், ஒரு மையவாடியும் உள்ளன. இவை இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குப் போதுமான அளவாக இருக்கின்றது. இவற்றிற்குப் போதுமான பாதை வசதிகளும் உள்ளன. மேலும், இவற்றில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இவற்றில் சில இடங்களில் மட்டும் சுற்றுச்சுவர்கள் கட்டப்பட்டு பாதுகாப்பாக உள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அங்கே கண்டிப்பாக மின்சார சுடுகாடு தேவை என்ற நிலை வருமானால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது அதுகுறித்து சிந்தித்துச் செயல்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி அமர்கின்றேன்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுற்றுப்புறச்சூழலின் அடிப்படையில்தான், அந்த மக்களுடைய சுகாதாரத்தின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இந்தமாதிரி சுடுகாடுகள் என்பது பல அங்கே இருப்பது உண்மைதான் என்றாலும்கூட, அங்கே சுற்றுப்புறச்சூழல் கடுமையாகப்

2005 செப்டம்பர் 22]

பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சென்னை போன்ற பகுதியிலே மின்சார சுடுகாடு இருக்கிற காரணத்தால், இன்றைக்குப் பல்வேறு ஏழையெளிய மக்கள்கூட செலவினங்களைக் குறைத்து அவர்களுடைய ஈமக்கிரியைகளை நடத்துவதற்கான வசதி வாய்ப்புகளைச் சென்னை மக்கள் பெற்றிருப்பதுபோல, வளர்ந்துவருகிற நெல்லை மாநகராட்சியிலும் அந்த மக்கள் பெற வேண்டும். இன்றைக்கு தாமிரபரணி ஆற்றினுடைய ஓரத்தில், குடிநீர் வருகிற அந்த ஆற்றின் ஓரத்தில்தான் இந்த சுடுகாடுகள் எல்லாம் அமைந்திருக்கின்றன என்பதை அமைச்சர் அறிந்திருப்பார் என்று கருதுகிறேன். ஆகவே, வளர்ந்து வருகிற இந்தக் காலகட்டத்தில் கண்டிப்பாக இந்த மின்சார சுடுகாடு இந்தப் பகுதிக்கு தேவை என்பதை அந்தப் பகுதியினுடைய மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மிகப் பழமையான கிருஷ்ணாம்பேட்டை சுடுகாடு உள்ளது. அந்தப் பகுதியில் மின்சார எரியூட்டு மயானம் அமைக்க வேண்டுமென்று நான் கோரிய நேரத்தில், அதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீடு தேவைப்படுகிறது, எனவே, எரிவாயு மூலமாக அந்தப் பகுதியிலே எரியூட்டு மயானம் அமைக்கலாம் என்று அதிகாரிகள் கூறினார்கள். அதற்கான, 30 இலட்சம் ரூபாயை என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் அளித்து வந்தேன். ஆனால், அதனுடைய திட்ட மதிப்பீடு 60 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். எனவே, என்னுடைய விருப்பத் திட்டத்தின் அடிப்படையிலே பணம் இல்லாத காரணத்தால், முன்னுரிமை திட்டத்தின் அடிப்படையில் உள்ள பணத்தை அதற்குப் பயன்படுத்துவதற்கு அரசு சிறப்பு அனுமதி வழங்குமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாநகராட்சியிலே, எந்தவிதத்திலும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படவில்லை. அந்த மயானங்கள் அமைந்திருக்கின்ற பகுதிகள் மூலமாக எந்தவிதமான பாதிப்பும் இல்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே வளர்ந்து வருகின்ற காலத்திலே அங்கே ஒரு மின்சார

மயானம் அமைப்பதற்கு உண்டான முயற்சியை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உசேன் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல, அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதிக்குத் தேவையான விதிவிலக்குகளை எல்லாம் இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து, அந்தப் பகுதியிலே அத்தியாவசியத் தேவை என்னவோ அதைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அதற்கு விதிவிலக்கு அளிப்பதற்கு உண்டான முயற்சியை மேற்கொள்வார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பல நகராட்சிகளில் பல ஏக்கர் நிலங்கள் சுடுகாடுகளாக இருக்கின்றன. அவற்றை மின்சார சுடுகாடுகளாக, எரிவாயு சுடுகாடுகளாக மாற்றினால் பல ஏக்கர் நிலங்கள் மீதப்படும். பல நகராட்சிகளிலே அரசு கட்டடங்கள் கட்டுவதற்கு இடம் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இதைத் தமிழகம் முழுவதும் செயல்படுத்தினால், அரசு நிலமும் மீட்கப்படும் என்கின்ற அந்த நோக்கத்தோடு அதை அமல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது இதுகுறித்து சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

20—

நீர்வழி விளையாட்டு பயிற்சி மையம்

***42284—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—